முருகப்பெருமான் துணை

**மகான் ஜமதக்னி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.02.2024**, சனிக்கிழமை

1. ஆறுமுகனார் அவதாரமாக வந்த
அண்ணலே அரங்க மகானே
ஏறுமுகம் உலகோர் அடைய
ஏழாம் படைவீடு படைத்தநல்

2. படைத்த நல் ஞான தேசிகனே
பாருலகில் உன் பெருமை கூறி
தடையற சோபகிருது சால் திங்கள்
தக்க பஞ்சதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 05 ம் நாள், 17.02.2024, சனிக்கிழமை)

3. வாரமதில் துல்லிய ஆசியை
வழங்குவேன் ஜமதக்னி யானும்
சோரமிலா ஞானயுகம் அமைய
சுப்பிரமண்யர் வழிபாடுதனை உரைப்பேன்

4. உரைக்கவே சுப்பனுக்கு மிஞ்சிய
உலகினில் கடவுள் இல்லை
அறத்தில் அன்னதானத்துக்கு மிஞ்சிய
ஆகமம் ஏதுமே இல்லை என்பேன்

5. என்கவே சரவணச் சுடரேற்றி
எங்கும் வழிபாடு தன்னை
சண்முகனார் பேரில் செய்ய
சகலருக்கும் சுப்பிரமண்யர் ஞானம்

6. ஞானம் சித்தி ஆகியே
நான்குமுகனார் ஆசியும் கிட்டி
தானதரும சிந்தை தொடர்பு
தனிப்பெருங் கருணை வடிவாகி

7. ஆகியே அரங்கன் வழிகாட்டலில்
அனைவரும் ஞானிகள் ஆகி
அகிலத்தில் மாற்றம் புரிவர்
அறம் தருமம் நிரம்பும்படி

8. நிரம்பும்படி சேவைகள் ஆற்றி
நிலவுலகில் தருமம் வளர்ப்பர்
வரம்புக்குரிய கட்டுப்பாடில்லா
வரம் பல அடைந்து உலகில்
9. உலகில் சாதிமத இன பேத
உயர்வு தாழ்வு கருதாதபடி
வேலவன் ஆசிபெற்றவர்களாக
வினைகளை வென்று வாழ்வர்
10. வாழ்வரே அரங்கன் தேடிய
வரம் பெற்ற ஞானிகளாக
ஊழ் வென்று உலகினை மாற்றும்
உயர் சக்திகளாக சகலதுமாக
11. ஆகவே மாற்றம் தேற்றம்
அடைந்து கலியுகம் தனை
யுகமாற்றி ஞானயுகம் படைப்பர்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—